www.nunnarivu.com
ஆகஸ்டு 2025
Price ₹ 15/-

# நீதியின் நுண்ணறிவு

நீதியின் நுண்ணறிவு
புலனாய்வு இதழ்
Vol.5 Issue.11
NEETHIYIN NUNNARIVU
புலனாய்வு இதழ்



## வெளிமாநில மாணவர்களால் கஞ்சா புழக்கம் அதிகரிப்பு...

### தாம்பரம் காவல் ஆணையர்!



## திராவிட மாடல் விடியல் ஆட்சியில் மயானத்திற்கு விடியல் எப்போது..?



## ஒரத்தநாடு தாசில்தார் யுவராஜின் சிறப்பான பணி..!

### மக்கள் நல்வாழ்வுக்கான முன்மாதிரி



## புதுக்கோட்டையில் புதிதாக நவீன வசதியுடன் கட்டப்பட்டு வரும் பேருந்து முனையத்தின் தில்லுமுல்லுகள்..


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Liquid Laundry Detergent
SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

www.nunnarivu.com
நீதியின் நுண்ணறிவு
NEETHIYIN NUNNARIVU புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய், G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன், B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்

கௌரவ ஆலோசகர்கள்
R.வீரராகவன் B.Sc., M.A., M.B.M., LL.B.,
A.கந்தசாமி S.P.
காவல்துறை கண்காணிப்பாளர் (ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன் M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
(முன்னாள் முதல்வர் - குருநானக்கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
சோம்புராஜன்
கூடுதல்ஆணையர், தொழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன் B.S.M.S.
S.வீரப்பன்

முதன்மை நிருபர்கள்
M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், S.ஆனந்த், V.மாதவன், A.ராஜ்மோகன்

நிருபர்கள்
R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின், C.சரவணன், S.சீனிவாசன், S.சஞ்சய்குமார், இம்ரான்கான், A.மதிமாறன், J.ஜெஸ்டின்டேவிஸ், T.தங்கபாண்டியன்

புகைப்பட கலைஞர் : விஜயகுமார்

சட்ட ஆலோசகர்கள்
K.M.S.செந்தில்குமார் BSc., B.L.,
M.சரவணன் M.Sc., B.L.,
A.வெங்கடேஷ்பாபு B.Sc., B.L.,

வடிவமைப்பு : 4 மீடியா டிசைன்ஸ்

நிர்வாக அலுவலகம்:
எண். 14/88, வெங்கடேஸ்வரா நகர், 3வது மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை- 42.
போன் : 9884949445, 99624 56555
nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

ஒரு நாட்டின் மக்களுக்கு கல்வி மற்றும் சுகாதாரம் இரண்டுமே மிக முக்கியமானவை. கல்வி அறிவை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகிறது. இதில் சுகாதாரத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் தற்போது 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் இணைந்துள்ளது. முழு உடல் பரிசோதனை செய்யும் இத்திட்டத்தை தமிழ்நாடு முதல்வர் தொடங்கி வைத்துள்ளார். இத்திட்டம் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மை காப்போம் 48 போன்ற பல்வேறு சுகாதார திட்டங்களின் வரிசையில், 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் இணைந்துள்ளது.

வழக்கமாக, முழு உடல் பரிசோதனை செய்வதற்கு தனியார் மருத்துவமனைகளில் குறைந்தபட்சம் ரூ.15 ஆயிரம் செலவாகும். ஏழை, எளிய பாமர மக்களால் இந்த பரிசோதனைகளை செய்ய இயலாது. இதனை தவிர்க்கும் பொருட்டு, மக்களை தேடிச்சென்று முழு உடல் பரிசோதனை செய்யும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பொதுமருத்துவம், அறுவை சிகிச்சை உள்ளிட்ட இந்திய மருத்துவ முறைகள் அனைத்தும் இத்திட்டத்தில் இடம்பெறுகின்றன.

ஏற்கனவே, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் ஏழை-எளிய மற்றும் நடுத்தர வருமானம் பெறுகிற குடும்பங்களுக்கு, தரமான மருத்துவ சிகிச்சைகளை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக பெற வழிவகை செய்கிறது. ஆபத்தான பல நோய்களுக்கு அதிகபட்சம் 5 லட்சம் ரூபாய் வரை மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் முதன்மை திட்டமான 'மக்களை தேடி மருத்துவம்' (MTM) என்னும் திட்டம் சுகாதார சேவையை மக்களின் வீட்டு வாசலுக்கே நேரடியாக கொண்டு செல்வதால், மாநிலத்தில் உயர் ரத்தஅழுத்தம் மற்றும் நீரிழிவு நோயை கையாள்வதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மக்கள் மருத்துவ பரிசோதனை செய்துகொண்டு, உடல் ஆரோக்கியம் பேண வழிவகை செய்கிறது.

இப்படி அடுத்தடுத்து அதிரடி திட்டங்களை கொண்டுவந்து, தமிழக மக்கள் நலன்காக்கும் அரசின் உன்னத திட்டமான 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம், அடுத்த வெற்றி மணிமகுடமாக அமைந்துள்ளது.



- ஆர்.சிவகுமார்,
ஆசிரியர்




# காரில் சென்று பகல் கள்ளக்களவு செய்யும் கும்பல்

## தஞ்சாவூர், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, ஈரோடு தொடர்ச்சியாக

# வீட்டை உடைத்து திருட்டில் ஈடுபட்ட நபர்கள் அதிரடி கைது

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி காவல் நிலைய சரகம் ரெஜினா நகர் பகுதியில் உள்ள பூட்டிய வீட்டை உடைத்து பீரோவில் உள்ள நகைகள் மற்றும் வெள்ளி பொருட்கள் திருட்டு போன்ற சம்பவங்கள் நடைபெற்று வந்தது.

இது சம்பந்தமாக தஞ்சாவூர் நகர மருத்துவ கல்லூரி காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டது. மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளியை கண்டுபிடிக்க,

தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜாராம் TPS உத்தரவின் படி, தஞ்சாவூர் நகர உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர்சோமசுந்தரம் அவர்கள் மேற்பார்வையில் மருத்துவக் கல்லூரி காவல் நிலைய ஆய்வாளர் சந்திரா, உதவி ஆய்வாளர் தென்னரசு தலைமையில், தலைமை காவலர் கோதண்டபாணி திருக்குமரன் முதல்நிலை காவலர்கள்



ராஜாராம்
எஸ்.பி.,



உதவி ஆய்வாளர்
தென்னரசு







அருண்மொழி வர்மன், இரண்டாம் நிலை காவலர்கள் இஸ்மாயில் விஜயசந்திரன் மற்றும் AR PC அறிவழகன் ஆகியோர் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டையில், குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட பல கொலைகள் மற்றும் கொள்ளையில் ஈடுபட்ட சிவகங்கை மாவட்ட ரவுடி மற்றும் ராமநாதபுரம் மாவட்ட A+ HS ROWDY

1: சுகுமார் 28/25 s/o. சண்முகம், வைரவன் பட்டி பெரியகோட்டை po சிவகங்கை மாவட்டம்

2. அமர்@அமர்நாத் 24/25 s/o. செல்வராஜ், குலைக் கால்தெரு மஜித் ரோடு சிவகங்கை மாவட்டம்.

3. குட்ட சங்கர் @ சங்கர் 25/25, பூமிநாதன், செக்கடி தெரு, மானாமதுரை, ராமநாதபுரம் மாவட்டம்.

என்பதை அறிந்து கோயமுத்தூரில் சொகுசு விடுதியில் சொகுசாக தங்கி இருந்த குற்றவாளியை கைது செய்து களவு சொத்துக்களை மீட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பபட்டனர்.

எதிரியை பிடிக்க உதவிய சைபர் கிரைம் இரண்டாம் நிலை காவலர் திரு. பிரகதீஸ்வரன் மற்றும் திரு. ஜோஸ்வா ஆகிய இருவருக்கும் மனமார்ந்த நன்றிகள், குற்றவாளிகளை பிடிக்க உதவிய திருச்சி தலைமை காவலர் ஹரிஹரன் ஈரோடு மாவட்டம் தலைமை காவலர் சிலார் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

# மடிப்பாக்கம் பகுதியில் இரிடியம் தொழிலில் முதலீடு செய்தால் மும்மடங்கு லாபம் தருவதாக கூறி,

# பணம் ரூ.92 லட்சம் வரை பெற்று, ஏமாற்றிய வெளிமாநில நபர் கைது..!




சென்னை, மடிப்பாக்கம், R.R நகர் பகுதியில் வசித்து வரும் தட்சிணாமூர்த்தி, வ/52, த/பெ.முத்து என்பவர் சூளையில் வெள்ளி பாத்திரங்கள் தயார் செய்யும் பட்டறை வைத்து நடத்தி வருகிறார். இவருக்கு அறிமுகமான ராஜாராம் என்பவர் மும்பையைச் சேர்ந்த பீர்முகமது பாதுஷா என்பவர் இரிடியம் தொழில் செய்து வருவதாகவும், அதில் முதலீடு செய்தால், மும்மடங்கு லாபம் கிடைக்கும் என்று ஆசை வார்த்தைகள் கூறியுள்ளார். இதனை உண்மையென நம்பிய தட்சிணாமூர்த்தி 2017 முதல் 2024 வரை சிறுக சிறுக என மொத்தம் ரூ.92 லட்சம் பணத்தை பீர்முகமது பாதுஷா என்பவரிடம் கொடுத்துள்ளார்.



ஆனால் பீர்முகமது பாதுஷா கூறியது போல் பணம் தட்சிணாமூர்த்தியின் வங்கி கணக்கில் ரூ.5 கோடி வரவு ஆகாத காரணத்தினால், தட்சிணாமூர்த்தி தான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டபோது, பீர்முகமது பாதுஷா, தட்சிணாமூர்த்திக்கு கொலைமிரட்டல் விடுத்துள்ளார்.

இது குறித்து தட்சிணாமூர்த்தி, S—7 மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், மோசடி பிரிவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். S—7 மடிப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் கண்ணன் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி பீர்முகமது பாதுஷா, வ/47, தானே, மகாராஷ்டிரா மாநிலம் என்பவரை கைது செய்தனர்.


விசாரணையில் கைது செய்யப்பட்ட பீர்முகமது பாதுஷா என்பவர் இரிடியத்தை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதால் கிடைக்கும் பணத்தை சட்டபூர்வமாக டிரஸ்ட் மூலம் பெற்று அதிக லாபம் தருவதாக கூறியும், புகார்தாரரின் குடும்பத்தினரை மும்பைக்கு வரவழைத்து அவார்டு ஷீல்டு கொடுத்து நம்பிக்கை ஏற்படுத்தியும், பணம் ரூ.5 கோடி வங்கி கணக்கில் வரவு ஆகும் என்று ஆசை வார்த்தை கூறி, அதற்காக RBI ஒப்புதல் வாங்க வேண்டும், NOC வாங்க வேண்டும் என்று பல்வேறு காரணங்கள் கூறி, சிறுக சிறுக பணம் ரூ.92 லட்சம் பெற்று ஏமாற்றியுள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பீர்முகமது பாதுஷா விசாரணைக்குப் பின்னர், (29.07.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# வேளச்சேரி பகுதியில் இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை பறித்துச் சென்ற 2 நபர்கள் கைது

## இருசக்கர வாகனம் மற்றும் 1 செல்போன் மீட்பு





சென்னை, வேளச்சேரி, TNHB காலனியில் வசித்து வரும் ராகேஷ், வ/19, த/பெ.தாமு என்பவர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 28.07.2025 அன்று இரவு, வேலை முடித்து, வேளச்சேரி, 100 அடி சாலையில் உணவு அருந்திவிட்டு, இருசக்கர வாகனத்தில் செல்ல முற்பட்டபோது, அங்கு வந்த 2 நபர்கள், அருகில் உள்ள டிபன் கடையில் இறக்கிவிடுமாறு, மேற்படி ராகேஷின் இருசக்கர வாகனத்தில் லிப்ட் கேட்டு ஏறி சென்றுள்ளனர்.

இருசக்கர வாகனம் கைவேலி அருகே சென்றுகொண்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தை நிறுத்திய, மேற்படி இருவரும், ராகேஷை தகாத வார்த்தைகள் பேசி, மிரட்டி, அவரது செல்போன் மற்றும் இருசக்கர வாகனத்தை பறித்துக் கொண்டு, அங்கிருந்து இருவரும் தப்பிச் சென்றனர். இது குறித்து ராகேஷ், J—7 வேளச்சேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

J—7 வேளச்சேரி காவல் நிலைய ஆய்வாளர் தங்கராஜ் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் சம்பவயிடத்தின் அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கண்காணிப்பு பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.நவீன்குமார், வ/24, ஜமீன் பல்லாவரம், சென்னை, 2.அன்புமணி, வ/25, பள்ளிக்கரணை, சென்னை ஆகிய 2 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் 1 இருசக்கர வாகனம் மற்றும் 1 செல்போன் ஆகியவை மீட்கப்பட்டது.


கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும், விசாரணைக்குப் பின்னர் (29.07.2025) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# நான்கு குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைப்பு

தென்காசி மாவட்டம், செங்கோட்டை காவல் நிலைய கஞ்சா வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளியான சுந்தரபாண்டியபுரம் முத்தையா என்பவரின் மகன் சுடலை மணிகண்டன், பாவூர்சத்திரம் காவல் நிலைய கொலை முயற்சி மற்றும் ஆயுத தடை சட்ட வழக்கின் குற்றவாளியான எல்லைப்புளி ஐயப்பன் என்பவரின் மகன் பாலாஜி 20, புளியங்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய போக்சோ வழக்கின் குற்றவாளிகளான திருவேட்டநல்லூர் கற்பகநாச்சியம்மன் கோவில் தெருவை சேர்ந்த அருணாச்சலம் என்பவரின் மகன் ராமர் 43 மற்றும் அய்யாபுரம் அரண்மனை தெருவை சேர்ந்த ரத்தினசாமி என்பவரின் மகன் செல்லசாமி 41 ஆகியோர் மீது பிரிவு 14 தமிழ்நாடு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு S. அரவிந்த் அவர்கள் பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சியர் திரு.ஏ.கே.கமல் கிஷோர் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவின் பேரில் மேற்படி நான்கு நபர்கள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.



30.07.2025 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி, சீர்காழி காவல் ஆய்வாளர் மற்றும் காவல் ஆளிநர்கள் சீர்காழி பகுதியில் மது வேட்டையில் ஈடுபட்டிருந்த போது காரைக்கால் மாவட்டத்திலிருந்து சட்ட விரோதமாக 1548 பாட்டில்கள் (284 லிட்டர்) பாண்டிச்சேரி மதுபானங்களை 03 கார், 01 இருசக்கர வாகனத்தில் கடத்தி வந்த 06 நபர்கள் கைது.



02.08.2025 அன்று, காவலர்கள் அனைவரும் தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனத்தில் செல்லும் அவசியத்தையும், பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக, இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி ஆயுதப்படை மைதானத்தில் தொடங்கி, பழைய பேருந்து நிலையம், பிருந்தாவனம், பழனியப்பா கார்னர், GH கார்னர் வழியாக சென்று, மீண்டும் ஆயுதப்படை மைதானத்தில் நிறைவுற்றது. இந்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அபிஷேக் குப்தா, இ.கா.ப., துவக்கி வைத்து காவல் ஆளிநர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.



## கிராம நத்தம் புறம்போக்கு பட்டா அவசியம்..

# நத்தம் நிலங்களில் வசிப்போர் பட்டா கேட்டால் மறுக்க முடியுமா?

**கிராம நத்தம் புறம்போக்கு பட்டா பெறுவது எப்படி தெரியுமா? ஆன்லைனில் உள்ள வசதிகள் என்னென்ன? நத்தம் புறம்போக்கு இடத்திற்கு எப்படி வீட்டுமனை பட்டா வாங்குவது, அதற்கான வழிமுறைகள் என்ன? அதற்கு தேவைப்படும் ஆவணங்கள் என்னென்ன? அந்த ஆவணங்களை எங்கு சமர்ப்பிக்க வேண்டும்? 3 சென்ட்டுக்கு மேல் உள்ள நிலத்துக்கு, பட்டா வழங்க முடியாது என்ற தாசில்தார் வழக்கில் சென்னை ஹைகோர்ட் வழங்கிய தீர்ப்பு நினைவிருக்கிறதா? இவைகளை சுருக்கமாக இங்கே பார்க்கலாம்.**

நத்தம் என்றாலே பொது மக்கள் குடியிருப்பாகும்.. இதுவே அரசுக்கு சொந்தமான இடமாக இருந்தால் நத்தம் புறம்போக்காக வகைப்படுத்தப்படும்.

கிராமத்திலுள்ள குடியிருப்பிற்கென ஒதுக்கப்பட்ட நிலத்திற்குதான், நத்தம் புறம்போக்கு நிலம் என்பார்கள்.. எனவே, கிராம நத்தம் நிலத்தை குடியிருப்புகளாக மட்டுமே பயன்படுத்த முடியுமே தவிர, வணிக நோக்கத்திற்கு பயன்படுத்த கூடாது.

### நத்தம் நிலம் பட்டா

இதுபோன்ற நத்தம் நிலங்களுக்கு பட்டா வழங்கும் திட்டத்தை அரசே செயல்படுத்தி வருகிறது. கிராமங்களிலோ அல்லது புறநகர் பகுதிகளிலோ அல்லது நகரங்களிலோ நீண்ட காலமாக நத்தம் குடியிருப்பு பகுதிகளில் வசித்து வந்து, அந்த இடத்திற்கு பட்டா வாங்காமல் இருந்தால் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில், நத்தம் பட்டா வேண்டி தாராளமாக விண்ணப்பித்து கொள்ளலாம்.

அரசுக்கு சொந்தமான நத்தம் பகுதிகளில் குடியிருந்து, வீடுகட்டி உங்களுடைய அனுபவத்தில் வைத்திருந்தாலும், அந்த வீட்டிற்கான ரசீது, எத்தனை வருடம் அந்த இடத்தில் அனுபவம் செய்து வந்தீர்கள், மின் இணைப்பு உள்ளிட்ட மற்ற ஆவணங்களை

சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பித்து இலவச வீட்டுமனை பட்டா வேண்டி விண்ணப்பிக்கலாம்.

### பட்டா எப்படி வழங்கப்படும்

ஆனால், நத்தம் அல்லது நத்தம் புறம்போக்கு இடத்திற்கு வீட்டுமனை பட்டா வேண்டி விண்ணப்பித்தால், அந்த குறிப்பிட்ட இடம், ஆட்சேபனையற்ற நிலமாக இருத்தல் வேண்டும்.. அப்போதுதான், அந்த இடத்தை வருவாய் ஆய்வாளர், விஏஓ நேரடியாக வந்து ஆய்வு மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிப்பார்கள். இதைவைத்தே, நத்தம் வீட்டுமனை பட்டாவை வட்டாட்சியர் வழங்குவர்.

அதேபோல, உங்களுடைய முன்னோர்கள் பெயர் அந்த சம்பந்தப்பட்ட புல எண்ணில் ஏற்கனவே பதிவாகியிருந்தால், வாரிசு சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஒருவேளை புல எண்கள் தெரியாவிட்டால், சம்பந்தப்பட்ட விஏஓ அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### 2 பேர் விண்ணப்பித்தால்?

நீங்கள் குடியிருக்கு பகுதி, ஆட்சேபனைக்குரிய பகுதியாக ஏரி, குளத்துக்கு அருகில் இருந்தாலோ அல்லது மக்கள் பயன்பாட்டிற்குரிய நிலத்தில் ஆக்கிரமித்திருந்தாலோ, அந்த இடத்திற்கு நத்தம் வீட்டுமனை பட்டா வழங்க முடியாது..

அதேபோல, அந்த நத்தம் இடமானது வேறொரு தனிநபர் பெயரில் இருந்தாலும், அந்த இடத்திற்கு 2 நபர்கள் வீட்டுமனை வேண்டி விண்ணப்பம் செய்திருந்தாலும், அந்த இடத்திற்கு பட்டா வழங்கப்படாது.. இப்படி 2 பேர் விண்ணப்பித்தால், அந்த இடம் யாருக்கு சொந்தம் என்பதை கோர்ட் தான் முடிவு செய்யும்.

eservices.tn.gov.in என்ற வெப்சைட்டிற்குள் நுழைந்து, அடையாளச் சான்று உள்ளிட்ட தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம்.. டவுன்லோடும் செய்து கொள்ளலாம்.

### ஹைகோர்ட் தந்த தீர்ப்பு

சமீபத்தில் கிராம நத்தம் தொடர்பான ஒரு வழக்கின் தீர்ப்பு பலரது கவனத்தையும் பெற்றிருந்தது.. அதாவது, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, மருதமுத்து, ராஜேந்திரன், சுப்பிரமணியன் கிராம நத்தம் நிலத்தில் நீண்ட காலமாக வசிக்கும் தங்களுக்கு பட்டா வழங்க கோரி விண்ணப்பித்திருந்தனர்..

3 சென்ட்டுக்கு மேல் உள்ள நிலத்துக்கு, பட்டா வழங்க முடியாது என தாசில்தார் விண்ணப்பங்களை நிராகரித்தார்... எனவே இதனை சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.. இந்த மனுக்களை விசாரித்த நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் பிறப்பித்த உத்தரவு இதுதான்:

### அரசு புறம்போக்கு நிலங்கள்

"கிராம நத்தம் என வகைப்படுத்தப்பட்ட, அரசு புறம்போக்கு நிலங்களுக்கு 1905 ஆண்டு நில ஆக்கிரமிப்பு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை. எனவே யாரும் அந்த நிலத்தை ஆக்கிரமித்து உரிமை கொண்டாட முடியாது' என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது

ஆனால், சட்டத்தின் கீழ், அரசின் அதிகாரம் என்பது, நில வருவாய் நிலுவைத் தொகையை வசூலிப்பதை தவிர, அதற்கு மேல் எதுவும் இல்லை என, கடந்த 1903ம் ஆண்டில் உயர் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய முழுமையான அமர்வு தீர்ப்பு வழங்கி உள்ளது.

நிலம் கிராம நத்தமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்ற காரணத்தினாலோ அல்லது உச்சவரம்புகளை மேற்கோள் காட்டியோ, பட்டா கோரும் நபர்களின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டியதில்லை.

### உச்ச வரம்பு நிலங்கள்

தனி நபர்கள் பட்டா கோரும்போது, அதில் குடியிருக்கின்றனரா அல்லது காலி நிலமா என்பதை மட்டுமே பரிசீலிக்க வேண்டும். கிராம நத்தம் நிலத்தில் யாரும் குடியிருக்காவிட்டால், அந்த நிலம் அரசுக்கு சொந்தம். ஆக்கிரமிப்புகள் இருந்தால் அரசு அகற்றலாம். இது தொடர்பாக, நில நிர்வாக ஆணையர், நான்கு வாரங்களில் சுற்றறிக்கை வெளியிட வேண்டும்" என்று நீதிபதி தெரிவித்தார்.

கிராம நத்தம் என வகைப்படுத்தப்பட்ட, அரசு புறம்போக்கு நிலங்களை அனுபவிக்கும் நபர்களுக்கு, உச்ச வரம்புகளை காரணம் காட்டி, நிலங்களுக்கு பட்டா வழங்க மறுக்க முடியாது என்று ஹைகோர்ட் தெளிவுபடுத்தியிருந்தது பலரது கவனத்தையும் பெற்றது நினைவிருக்கலாம்.

# மக்கள் பாராட்டும் உதவி மின்பொறியாளர் ராகவன்!



தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் வாட்டாத்திகொல்லைக்காடு துணை மின் நிலையம் மின்சார அலுவலகத்தில் உதவி மின் பொறியாளராக பணியாற்றி வரும் திரு.ராகவன் அவர்கள் சாமானிய மக்கள் எல்லோராலும் எளிதில் அணுகக்கூடிய எளிய மனிதராக பெயர் பெற்று வருகிறார்.

இவரைப் பற்றி பொதுமக்கள் கூறும் போது பொதுவாக மின்சார அலுவலகத்திற்கு நாம் மின்சாரம் சம்பந்தப்பட்ட எந்த வேலைக்கு சென்றிருந்தாலும் அதிகாரிகள் எளிதில் அனுக முடியாதவர்களாக இருப்பார்கள் என்றும் ஆனால் இரவு பகல் என்று யோசிக்காமல் இவரை எப்போது தொடர்பு கொண்டாலும் அணுக முடிகிறது என்றும் பாராட்டுகளை பெறுகிறார்.

மேலும் வசதி இல்லாத ஒரு குழந்தைக்கு தன்னுடைய உயர் அதிகாரிகள் துணையுடன் கல்விக்காக உதவி செய்து வருவதோடு தன் துறை ரீதியாகவும் தன்னால் முடிந்த உதவிகளை நேர்மையுடன் செய்து, சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் பாராட்டுக்களை பெற்று எடுத்துகாட்டாக விளங்கும் இவருக்கு நாமும் மென்மேலும் மனித நேயத்துடன் செயல்படவும் பணி சிறக்கவும் வாழ்த்துக்களை தெரிவிப்போம்.

# கிண்டி பகுதியில் செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட வழக்கில் 5 வருடங்களாக தலைமறைவாக இருந்த குற்றவாளி கைது..!



சென்னை, ஈக்காட்டுதாங்கல் பகுதியில் வசித்து வந்த ஹேமலதா, பெ/வ–21, என்பவர் தனியார் நிறுவத்தில் வேலை செய்து வந்தார். இவர் கடந்த 19.05.2020 அன்று மாலை, வேலை முடித்து, கிண்டி, நவரத்னா கார்டன், ராஜராஜன் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள், மேற்படி ஹேமலதா கழுத்தில் அணிந்திருந்த தாலி செயினை பறித்துக் கொண்டு, இருவரும் இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர். இது குறித்து ஹேமலதா, 19.05.2020 அன்று J–3 கிண்டி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு போலீசார் செய்து விசாரணை மேற்கொண்டனர்.

J–3 கிண்டி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி சீனு, வ/23, திருவல்லிக்கேணி, சென்னை என்பவரை கடந்த 09.06.2020 அன்று கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

மேலும், J–3 கிண்டி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் பார்த்தசாரதி தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய சுமார் 5 வருடங்கள் தலைமறைவாக இருந்த எதிரி சூரியபிரகாஷ், வ/27, திருவல்லிகேணி, சென்னை என்பவரை (30.07.2025) கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சூரியபிரகாஷ் மீது ஏற்கனவே D–3 ஐஸ் ஹவுஸ் காவல் நிலையத்தில் ஒரு அடிதடி வழக்கு உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சூரியபிரகாஷ், விசாரணைக்குப் பின்னர் (30.07.2025) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்ற இரண்டு இலங்கை நபர்கள் அதிரடி கைது

பட்டுக்கோட்டை உட்கோட்டம் அதிராம்பட்டினம் காவல் நிலையத்திற்குட்பட்ட கீழத்தோட்டம் பகுதியில் இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்ற இலங்கை நாட்டவர்களான அறிப்பு சிலாவுத்தைச் சேர்ந்த அமலதாசன் மற்றும் தோட்டவல்லியைச் சேர்ந்த வரப்பிரகாசம் ஆகியோரை கைது செய்து அவர்களிடமிருந்த 7 மூட்டைகளில் இருந்த 266 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.






# திருச்சியில் சிறுமிக்கு பாலியல் தொல்லை எஸ்ஐ உட்பட 3 பேர் பணிநீக்கம்



திருச்சி முக்கொம்பில் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு அளித்த காவல் உதவி ஆய்வாளர், 2 காவலர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். திருச்சி மாவட்டம் முக்கொம்பில் 4.10.23 அன்று காதலருடன் தனியாக இருந்த 17 வயது சிறுமிக்கு ஜீயபுரம் காவல் உதவி ஆய்வாளராக இருந்த சசிகுமார், நவல்பட்டு காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் பிரசாத், திருவெறும்பூர் பகுதி நெடுஞ்சாலை ரோந்து காவலர் சங்கர ராஜபாண்டியன், ஜீயபுரம் போக்குவரத்து பிரிவு காவலர் சித்தார்த்தன் ஆகியோர் பாலியல் தொந்தரவு அளித்துள்ளனர்.

இதுகுறித்த புகாரின்பேரில் ஜீயபுரம் அனைத்து மகளிர் போலீஸார், உதவி ஆய்வாளர் சசிகுமார் உள்ளிட்ட 4 பேரையும் கைது செய்தனர். பின்னர் 4 பேரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். துறை ரீதியாக நடைபெற்று வந்த விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் உதவி ஆய்வாளர் சசிகுமார், காவலர்கள் சித்தார்த்தன், பிரசாத் ஆகியோரை பணியில் இருந்து நிரந்தரமாக நீக்கி திருச்சி சரக டிஐஜி வருண்குமார் உத்தரவிட்டுள்ளார். இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு காவலரான சங்கர ராஜபாண்டியன் மீதான விசாரணை நிலுவையில் உள்ளது.

---




# குமரியில் 7 காவல் நிலையங்கள் தரம் உயர்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிப்பள்ளம், தென் தாமரைக்குளம், அஞ்சு கிராமம், கொற்றிக்கோடு, பளுகல், கடையால மூடு, மண்டைக்காடு ஆகிய 7 காவல் நிலையங்கள் தற்போது உதவி ஆய்வாளர் காவல் நிலையங்களாக இருந்து வருகிறது. இந்த 7 காவல் நிலையங்களும் ஆய்வாளர் அந்தஸ்துக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.



# பேராவூரணி அருகே 238 கிலோ கஞ்சா பறிமுதல்...

## இலங்கைக்கு கடத்த முயற்சியா

## போலீஸ் விசாரணை

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அருகே, கட்டையங்காடு கிராமத்தில் உள்ள காட்டாற்று பாலத்தில் 238 கிலோ கஞ்சாவை திருச்சிற்றம்பலம் போலீசார் பறிமுதல் செய்து, இரண்டு பேரை கைது செய்தனர்.

திருச்சிற்றம்பலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அலாவுதீன் தலைமையிலான போலீசார் ரகசிய தகவலின் பேரில் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கட்டயங்காடு பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு சொகுசுக் காரை நிறுத்தி சோதனை செய்தனர். சோதனையில் அந்த காரில் 7 மூட்டைகளில் 238 கிலோ கஞ்சா பொட்டலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து கஞ்சா மூட்டைகளுடன் காரை பறிமுதல் செய்த போலீசார் காரில் இருந்த தூத்துக்குடி மாவட்டம் சோதிங்கநல்லூர் பகுதியை சேர்ந்த சுந்தரம் மகன் சீனிவாச பெருமாள் ( 25) திருநெல்வேலி மாவட்டம் திருமலைகொழுந்தபுரம் ஆறுமுகம் மகன் முத்துமாலை (21) ஆகிய இருவரையும் பிடித்து விசாரணை செய்த போது, சென்னை ரெட்ஹில்ஸ் பகுதியைச் சேர்ந்த பாலா என்பவர் கஞ்சா மூட்டைகளை கொடுத்து அனுப்பியதாகவும், இதை கட்டையங்காடு பகுதியில் வந்து ஒருவர் வந்து பெற்றுக் கொள்வார் என தெரிவித்ததாகவும் அதற்குள் போலீசாரிடம் பிடிபட்டு விட்டோம் என தெரிவித்துள்ளனர்.

கஞ்சா மூட்டைகள் சென்னையில் இருந்து திருச்சி — புதுக்கோட்டை பட்டுக்கோட்டை வழியாக கட்டையங்காடு பகுதிக்கு கடத்தி வரப்பட்டது போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. கஞ்சா பொட்டலங்கள் சேதுபாவாசத்திரம் கடற்கரை பகுதியிலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு கடத்த கொண்டுவரப்பட்டு இருக்கலாம் என கூறப்படுகிறது. தஞ்சாவூர் எஸ்.பி ராஜாராம் உத்தரவின் பேரில், பட்டுக்கோட்டை டிஎஸ்பி ரவிச்சந்திரன் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார். இது குறித்து திருச்சிற்றம்பலம் போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் . பிடிபட்ட கஞ்சாவின் சர்வதேச மதிப்பு ரூ.50 லட்சம் இருக்கும் என கூறப்படுகிறது .

# வெளிமாநில மாணவர்களால் கஞ்சா புழக்கம் அதிகரிப்பு...

## தாம்பரம் காவல் ஆணையர் தகவல்!

தாம்பரம் மாநகர காவல் ஆணையரகத்துக்கு உட்பட்ட பொத்தேரி, காட்டாங்குளத்தூர், மறைமலைநகர் உட்பட்ட பகுதிகளில் பல்வேறு கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அதில், படித்து வரும் மாணவர்கள் தங்கி இருக்கும் விடுதிகளில் போதை புழக்கம் இருப்பதாக தொடர்ந்து தாம்பரம் மாநகர காவல் ஆணையருக்கு புகார்கள் வந்தன.

இந்த நிலையில், தாம்பரம் காவல் துணை ஆணையர் பவன் குமார் ரெட்டி தலைமையில் கடந்த 26 ஆம் தேதி அன்று பொத்தேரி, மறைமலைநகர் மற்றும் காட்டாங்குளத்தூர் பகுதிகளில் அதிரடி சோதனை நடத்தினர்.

இந்த சோதனை ஒரு உதவி காவல் ஆணையாளர், 5 காவல் ஆய்வாளர்கள், 20 உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் 60 காவலர்கள் அடங்கிய பல்வேறு குழுக்கள் மூலம் நடத்தப்பட்டது. மொத்தமாக 12 இடங்களில் ஒரே நேரத்தில் சோதனை நடைபெற்றது. அவற்றில் 5 அடுக்குமாடி குடியிருப்புகள், 2 தனி வீடுகள், 1 பான் கடை, 2 பெட்டி கடைகள், 1 காபி ஷாப் மற்றும் 1 சாலையோரக் கடையில் சோதனை நடத்தப்பட்டது.

இந்த சோதனையில் 166 கிராம் கஞ்சா, 5,250 கஞ்சா சாக்லெட்டுகள், ஹுக்கா, தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள், கஞ்சா விற்பனை மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 10 மொபைல் போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், 7 கல்லூரி மாணவர்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட கல்லூரி மாணவர்கள் அனைவரும் 2 ஆம் ஆண்டு B.Tech, CSC மற்றும் 4—ஆம் ஆண்டு B.Tech, CSC படித்து வருகின்றனர். இது குறித்து மறைமலைநகர் காவல் நிலையத்தில் போதைப் பொருள் தடுப்புச் சட்டம், புகையிலை பொருட்கள் தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் 11 நபர்கள் மீது 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



இந்த நிலையில், இது குறித்து தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது அவர், ''பொத்தேரி, காட்டாங்குளத்தூர், மறைமலைநகர் பகுதியில் கல்லூரி மாணவர்கள் தங்கி இருக்கும் விடுதியில் போதைப்பொருள் பயன்பாடு உள்ளது என வந்த தகவலின் அடிப்படையில் மட்டுமே சோதனை நடத்தப்பட்டது. நாங்கள் சில கல்வி நிறுவனங்களை மட்டும் குறி வைத்து இந்த சோதனையை நடத்தவில்லை.

சென்ற ஆண்டும் இந்த பகுதியில் சோதனை நடத்தப்பட்டு போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அதே போல இந்த ஆண்டும் சோதனை நடத்தப்பட்டது. கல்லூரி மாணவர்கள் ஏழு பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். மற்ற பெட்டிக் கடையில் கஞ்சா விற்பனை செய்த ஐந்து பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு தங்கி படிக்கும் வெளிமாநில மாணவர்கள் விடுமுறை நாட்களில் ஊருக்குச் சென்று திரும்பும் பொழுது கஞ்சாவை அதிக அளவில் வாங்கி வந்து இங்கு விற்பனை செய்வதால் கஞ்சா புழக்கம் அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டில், தாம்பரம் காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை மொத்தம் 318 போதை பொருள் தடுப்பு சட்டம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,516 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 341 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 1,208 கிலோ போதைப் பொருட்கள் உரிய சட்ட நடைமுறைகளை பின்பற்றி அழிக்கப்பட்டுள்ளன. தொடர் போதைப் பொருள் கடத்தல் வழக்குகளில் தொடர்புடைய 11 பேரை கண்டறிந்து, அவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ், தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போதை பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒரு பாதுகாப்பான, நம்பகமான மற்றும் போதைப்பொருள் இல்லா சமூகத்தை உருவாக்குவதற்கு தாம்பரம் மாநகர காவல்துறையின் தொடர் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் மேலும், இதே போல போதைப் பொருட்களுக்கு எதிராக சோதனைகள் தொடரும்'' என அவர் தெரிவித்தார்.





செய்தி மக்கள் தொடர்பு துறையின் மூலம் தமிழக அரசின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் சாதனைகளை தொகுத்து 'நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட நான்காண்டு சாதனை மலரினை மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா.இ.ஆ.ப அவர்கள் தலைமையில் வெளியிட்டார்கள்.

# பட்டாவில் மாற்றம் செய்யனுமா?




## தமிழக அரசு அறிவிப்பு!

**தமிழ்நாட்டில் வாரிசு சான்றிதழ் பெறுவது, பட்டாவில் பெயர் மாற்றம் செய்வது போன்ற அரசு சேவைகளை பெறுவதற்காக, பொதுமக்கள் இனி இ—சேவை மையங்களுக்கும், வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும், கிராம நிர்வாக அதிகாரி (VAO) அலுவலகங்களுக்கும் மீண்டும் மீண்டும் நடையாய் நடக்க வேண்டியதில்லை. தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம்கள், இந்த சிக்கலான நடைமுறைகளை மிகவும் எளிதாக்கி, மக்களின் இல்லங்களுக்கே அரசு சேவைகளை கொண்டு வந்துள்ளன.**

இதுநாள் வரை வாரிசு சான்றிதழ் வாங்க வேண்டுமானால், முதலில் இ—சேவை மையங்களில் விண்ணப்பித்து, பின்னர் தேவையான ஆவணங்களுடன் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் வருவாய் ஆய்வாளரை சந்தித்து, இறுதியாக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று ஒப்புதல் பெற வேண்டியிருந்தது. இதேபோல, பட்டாவில் பெயர் மாற்றுவதற்கும் பல அரசு அலுவலகங்களின் படிகளில் ஏறி இறங்க வேண்டியிருந்தது. இந்த நீண்ட செயல்முறைகளால், பொதுமக்களுக்கு கால விரயமும், அலைச்சலும், பணச் செலவும் அதிகமாக இருந்தது. இந்த சிரமங்களை போக்கும் வகையில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பகுதியிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த முகாம்களில் வருவாய்த்துறை, வேளாண்துறை போன்ற 13க்கும் மேற்பட்ட முக்கிய அரசு துறைகளின் அதிகாரிகள் ஒரே இடத்தில் இருப்பார்கள். இதனால், மக்கள் தங்களின் பல்வேறு தேவைகளுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காண முடிகிறது.

வாரிசு சான்றிதழ் — வாரிசு சான்றிதழ் பெற தேவையான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் முகாமிலேயே சமர்ப்பிக்கலாம். மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

பட்டா மாற்றம் — பட்டா தொடர்பான திருத்தங்கள், பெயர் மாற்றங்கள் போன்ற சேவைகளுக்கு, வருவாய்த்துறை அதிகாரிகள் முகாமிலேயே இருப்பதால், பொதுமக்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கி, செயல்முறையை எளிதாக்குகின்றனர்.

உடனடி தீர்வு — முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாகத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மற்ற கோரிக்கைகள், அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் நிறைவேற்றப்படும் என அரசு உறுதியளித்துள்ளது.

தேவையான ஆவணங்கள்

வாரிசு சான்றிதழ் போன்ற சேவைகளை பெற, கீழ்க்காணும் அடிப்படை ஆவணங்களை எடுத்து செல்வது அவசியம். இறந்தவரின் இறப்புச் சான்றிதழ், விண்ணப்பதாரர் மற்றும் அனைத்து வாரிசுதாரர்களின் ஆதார் அட்டை, குடும்ப அட்டை (ரேஷன் கார்டு), ஒரு சுய உறுதிமொழிப் பத்திரம், அனைத்து வாரிசுகளின் முகவரி மற்றும் பிறந்த தேதிக்கான சான்றுகள். இந்த "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்கள், அரசு நிர்வாகத்தை மக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே கொண்டு வந்து, சிக்கலான நடைமுறைகளை எளிமைப்படுத்தி, பொதுமக்களின் நேரத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்துவதில் ஒரு முக்கியப் பங்காற்றுகின்றன.

# தனியார் மயத்துக்கு எதிர்ப்பு

# ரிப்பன் கட்டிடம் முன்பு பந்தல் அமைத்து தூய்மை பணியாளர்கள் போராட்டம்

**தூய்மை பணியை தனியார் வசம் ஒப்படைக்க எதிர்ப்பு தெரிவித்து ரிப்பன் கட்டிடம் முன்பு தூய்மை பணியாளர்கள் பந்தல் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

**சென்னை மாநகராட்சியில் ராயபுரம், திரு.வி.க.நகர் மண்டலங்களில் தூய்மைப்பணியை தனியார் வசம் ஒப்படைக்க மாநகராட்சி நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. அதனை கண்டித்து அந்த மண்டலங்களில் தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் பணி பாதுகாப்பு வழங்க வேண்டும்.**



தூய்மை பணியை தனியார் வசம் ஒப்படைக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி உழைப்போர் உரிமை இயக்கத்தைச் சேர்ந்த தூய்மை பணியாளர்கள் சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, வளாகம் முன்பு குவிக்கப்பட்டிருந்த போலீசார் அவர்களை வெளியேற்றினர். இதையடுத்து ரிப்பன் மாளிகையின் பிரதான நுழைவு வாயில் நடைபாதையில் அமர்ந்து குடியேறும் போராட்டத்தை நடத்துவதாக அறிவித்தனர்.





இதையடுத்து துணிகளால் ஆன பந்தல்களை அமைத்து போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர். இதனால், ரிப்பன் கட்டிட அலுவலகத்தின் அனைத்து வாயில் கதவுகள் மூடப்பட்டு போலீசாரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. ரிப்பன் கட்டிட அலுவலக முன்பகுதியில் தடுப்புகள் அமைக்கப்பட்டு யாரும் நுழையமுடியாத அளவுக்கு பாதுகாப்பு போடப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், தூய்மைப்பணியை தனியாரிடம் ஒப்படைக்க மாட்டோம் என்று உறுதி அளித்தால் மட்டுமே கைவிடப்படும் என திட்டவட்டமாக தெரிவித்தனர்.



# ஒரத்தநாடு தாசில்தார் யுவராஜின் சிறப்பான பணி..!

## மக்கள் நல்வாழ்வுக்கான முன்மாதிரி

கடந்த மார்ச் மாதம் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தாசில்தார் அலுவலகத்தில் புதிய தாசில்தாராக யுவராஜ் பதவியேற்றார். பதவியேற்ற நாள் முதல் இந்து சமய அறநிலையத்துறையின் அறிவிப்பைப் பின்பற்றி, ஜாதிப் பெயரோ குறிப்பிட்ட பெயர்களோ இல்லாமல் கோவில்களில் அச்சிடப்படும் அழைப்பிதழ்கள் மற்றும் பெறப்படும் நன்கொடைகளில் பதியப்படும் பெயர்கள் ஆகிய அனைத்தையும் கண்காணிக்க ஏற்பாடு செய்து சிறப்பாகத் தனது செயல்பாடுகளைத் தொடங்கினார்.

### கல்வி மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

தனியார் பள்ளிகளில் காடுகள் குறித்த விழிப்புணர்வு பேரணியைத் துவக்கி வைத்து, பள்ளி மாணவர்களிடையே விளக்க உரை ஆற்றிக் காடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது வரவேற்பைப் பெற்றது.

அரசால் நடத்தப்படும் ஜமாபந்தி முகாமைச் சிறப்பாக ஏற்பாடு செய்து, 150 மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சியர் மூலம் பொதுமக்களுக்கு வழங்கி, மரங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தியது மக்களின் நெஞ்சைத் தொடும் நிகழ்வாக அமைந்தது.

### குழந்தைகள் நலன் மற்றும் கல்வி உதவி

தாய் தந்தை இழந்த பள்ளி மாணவ மாணவியர் 43 நபர்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தத்தெடுக்க கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் ஒரத்தநாடு வட்டத்தில் சார்பாக 43 குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டு அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் கல்வி உதவிகள் ஆகியவற்றை ஒரத்தநாடு வட்டாட்சியர் மூலமாக செய்யப்பட்டு வருகிறது





அவற்றில் மிகவும் அடிப்படை வசதிகள் இல்லாத ஐந்து மாணவ மாணவியருக்கு தலா ஐந்தாயிரம் வீதமும் ஒரே குடும்பத்தில் தாய் தந்தை இழந்த மூன்று மாணவ மாணவிகளுக்கு பத்தாயிரம் ரூபாயும் இதே போல் கல்வி கட்டணம் செலுத்த இயலாத ஒரு கிருபாளினி என்கின்ற மாணவிக்கு 45 ஆயிரம் ரூபாய் பள்ளி தாளாளரை கேட்டுக் கொண்டதன் பேரில் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதும் இவரின் சிறப்பான சேவையை உணர்த்துகிறது.

மேலும் கடந்த 30 வருடமாக இல்லாத நிகழ்வாக ஒரத்தநாடு வட்டத்தில் கடந்த மே மாதம் நடந்த மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடந்த ஜமாபந்தி விழாவில் அனைத்து கிராம கணக்குகளும் தணிக்கை முடிந்த இறுதி நாளன்றே மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கையெழுத்து பெற்றது வரலாற்று சாதனையாகும் ஒரத்தநாடு வட்டத்தை பொருத்தவரை ஜமாபந்தி தணிக்கைக்கு அவ்வளவு எளிதாக கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து கணக்குகள் வராது என்பது எல்லோரும் அறிந்தது ஆனால் இவர் ஒரத்தநாடு வட்டாட்சியராக பணியாற்ற பிறகு கிராம நிர்வாக அலுவலர்களிடமும் வட்ட அலுவலக பணியாளர்களிடம் மிகவும் இனிமையாக அணுகி இவ்வளவு சிறப்பாக இந்த பணியை முடித்தார் என்பது தஞ்சாவூர் மாவட்டமே அறியும்.

மேலும் தினந்தோறும் குறைகளுடன் வரும் மக்களை கனிவுடன் பேசி உடனுக்குடன் உரிய எழுத்தர்களிடம் கோப்புகளை கேட்டு விரைவாக குறைகளை களைவதில் மக்களிடம் சிறப்பான பெயரை பெற்றுள்ளார்.

இறுதியாக கடந்த ஜூன் மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வருகையின் போது 385 இலவச வீட்டு



மனை நத்தம் பட்டாக்களை இணைய வழியில் பதிவேற்றம் செய்து அவர்களுக்கு பட்டா வழங்கி அனைவர் மனதிலும் இடம் பிடித்துள்ளார்.

## மூதாட்டிகளுக்கு உடனடி உதவி

கடந்த மே மாதம் நடந்த ஜமாபந்தியில் கைவிடப்பட்ட மூதாட்டிகளுக்கு ஒரு மணி நேரத்தில் வீட்டுமனை வழங்கி நெகிழவைத்த சம்பவம் குறிப்பிடத்தக்கது. மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஜமாபந்தி வரிசையில் நின்ற மூதாட்டிகளை அழைத்து அவர்களுக்கு என்ன பிரச்சினை என்று கேட்டபோது, இருவருக்கும் தங்குவதற்கு வீடு இல்லை, வீட்டுமனை இல்லை என்று இரண்டு மூதாட்டிகளும் கோரிக்கை வைத்தனர். இரண்டு மூதாட்டிகளையும் பார்க்கக் கலெக்டர் கண்கலங்கி, ஒரத்தநாடு தாசில்தார் யுவராஜை அழைத்து, "ஒரு மணி நேரத்தில் இந்த இரண்டு மூதாட்டிகளுக்கும் இலவசமாக அரசு வீட்டுமனை வழங்க முடியுமா?" என்று கேட்டார். மாவட்ட ஆட்சியர் கேட்டவுடன் உடனடியாக இரண்டு வீட்டுமனைகளை அரை மணி நேரத்தில் தயார் செய்து கொடுத்த சம்பவமும் சமூக





தமிழ்நாடு அரசு
தஞ்சாவூர் மாவட்டம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா - 2025

பாராட்டுச் சான்றிதழ்

பெயர் : எஸ். யுவராஜ்
பதவி : வட்டாட்சியர்
துறை : வட்ட அலுவலகம் - ஒரத்தநாடு

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கல்லணையில் தண்ணீர் திறப்பு மற்றும் ரூ 1192 கோடி மதிப்புள்ள பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல் மற்றும் 2.25 இலட்சம் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை சிறப்பாக நடத்திட பணிபுரிந்தமையினை பாராட்டி இச்சான்று வழங்கப்படுகிறது.

இடம் : தஞ்சாவூர்
நாள் : 16.06.2025

பா.பிரியங்கா பங்கஜம் IAS
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்



ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## கிராமப்பகுதி மேம்பாடு மற்றும் கல்வி

கிராம நரிக்குறவர் பகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறையின் தமிழக அரசின் தொல்குடித் திட்டம் சிறப்பு முகாம் நடைபெற்றது. பத்தாம் வகுப்பு படித்த மாணவன் அதிக விடுப்பு எடுத்து பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்ட நிலையில், மீண்டும் தன்னைப் பள்ளியில் அனுமதிக்கக் கோரி கொடுக்கப்பட்ட மனு மீது, வட்டாட்சியர் நேரடியாகப் பள்ளிக்குச் சென்று அம்மாணவரை மீண்டும் பள்ளியில் மாற்றுச் சான்றிதழ் வழங்கிச் சேர்த்தார். இதேபோல் மற்றொரு மாணவி ஆறாம் வகுப்பில் பாதியில் படிப்பை நிறுத்தியதைத் தொடர்ந்து மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். மேலும் இதேபோல் படிப்பைப் பாதியில் நிறுத்திய முப்பது மாணவர்களின் பெற்றோரிடம் பேசி மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கான முயற்சிகளைச் சிறப்பாகச் செய்து பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றார்.

அதோடு மட்டுமல்லாமல், அதிகம் படித்த மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்குப் புத்தகங்கள் மற்றும் ஊக்கத்தொகை என ஏழு குழந்தைகளுக்கு வழங்கி, நரிக்குறவர் இனச் சமூக மக்களிடம் கல்வியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, அவர்களை மேலும் தொடர்ந்து படிக்க ஊக்குவித்தார்.




## நீர்நிலை மேம்பாடும் ஊழல் ஒழிப்பும்

இதேபோல் பல ஏரி மற்றும் குளங்களைத் தூர்வாரச் சிறப்பான முறையில் நடவடிக்கை எடுத்தார். பொதுப்பணித்துறை மற்றும் வடிகால் வாய்க்காலில் தண்ணீர் செல்வதற்கு இடையூறாக இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொண்டார்.

அலுவலகம் என்றால் லஞ்சம் தலைவிரித்து ஆடுவதாகவும், கையெழுத்துக்குக் காசு வேண்டும் என்றும் பரவலாகப் பேசப்பட்டு வரும் கருத்துகளுக்கு மத்தியில், தனது பணியை நேர்மையாகவும் சிறப்பாகவும் செய்து வரும் வட்டாட்சியர் யுவராஜ் அவர்களுக்கு, இதேபோன்று மென்மேலும் நேர்மையாகவும் நியாயமாகவும் பணியில் சிறந்து விளங்க நமது குழுவின் சார்பாக வாழ்த்துகள்.

## வரலாற்று சிறப்புமிக்க சாதனை

மேலும் மிகப்பெரிய வரலாற்றுப் பதிவாக, தாசில்தார் அலுவலகத்தில் 1435ஆம் ஆண்டு பசலித் தொடக்க விழாவாகப் பொதுமக்கள் உடனடியாகப் பசலிக்கான வருவாய்த்துறை ஆவணங்களைப் பெறுவதற்கு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. 1435ஆம் ஆண்டு கணக்குகள் நிறைவடைந்து மீண்டும் தொடங்கியது பொதுமக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இதுபோல் தொடர்ந்து தனது பணியைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் தாசில்தார் யுவராஜ் அவர்களை மாவட்ட ஆட்சியர் பாராட்டிச் சான்றிதழ் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு வீட்டு வசதித் துறை

# அனுமதியற்ற மனைகளுக்கு அங்கீகாரம் பெற கால நீட்டிப்பு



பல நாள் கோரிக்கைகளைத் தொடர்ந்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதித் துறை மூலம் வெளியிடப்பட்டுள்ள அரசாணையில், பிரிவுகளைப் பெறுவதற்கும், தனிமனை அனுமதி பெறுவதற்கும் அனுமதியற்ற மனைகளை அங்கீகரித்து அனுமதி வழங்க இந்த அரசாணை வகை செய்யும்.


இந்த அரசாணையில் கூறியிருப்பது என்னவென்றால், 20.10.2016—க்கு முன்னர் அனுமதியற்ற மனைப் பிரிவுகளின் கீழ் ஒரு மனையாவது விற்பனை செய்யப்பட்டிருந்தால், தாராளமாக இந்த அரசாணையின் மூலம் இணையதளத்தின் வாயிலாக அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம். இதற்கான கட்டணம் ரூபாய் 500 ஆகப் பெறப்படுகிறது.

20.10.2016—க்கு முன்னர் அந்த அனுமதியற்ற மனைப் பிரிவில் யாரேனும் ஒருவரிடம் வாங்கி, அதில் தற்போது வீடு கட்ட வேண்டும் என்று விரும்பினால், அதற்குரிய தனிமனை அங்கீகாரத்திற்கும் தற்போது விண்ணப்பிக்கலாம். இந்தச் செயல்பாடுகளுக்குரிய கால அவகாசம் 30.6.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கடந்த 15.5.2025—ஆம் தேதியில் அரசாணை எண் 70, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்குப் பெரும் பயனளிக்கூடிய இந்த உபயோகமான அரசாணையை வெளியிடுவதற்குரிய முக்கியக் காரணம், மரியாதைக்குரிய இயக்குநர் நகர்ப்புற அமைப்பு இயக்கம் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக வெகுவான பொதுமக்களின் கோரிக்கையாகவும், அதிகப்படியான நிலுவையில் உள்ளதாகவும் கருதப்பட்ட தனிமனை அனுமதி அல்லது அங்கீகாரம் பெறுவதற்கு தற்போது கால நீட்டிப்பு செய்திருப்பதால், நிலுவையில் உள்ள அனைத்து தனிமனை அனுமதி அங்கீகாரமும் தகுதி அடிப்படையில் அங்கீகரிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசுத் துறைச் செயலர் வீட்டு வசதித் துறை அவர்களாலும், மாண்புமிகு அமைச்சர் வீட்டு வசதித் துறை அவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட கூட்டு முயற்சியில் அரசாணை எண் 70 பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, விற்பனை செய்யாத வீட்டு மனைகளை வரைமுறைப்படுத்திக் கொள்ளவும், விற்பனை செய்யப்பட்டு வரைமுறைப்படுத்தப்படாத தனிமனை அனுமதி போன்றவற்றை வரைமுறைப்படுத்திக் கொள்ளவும் இந்தக் கால அவகாசம் மிகவும் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.



# ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் லேப்டாப் வழங்கி பாராட்டு

## 236 வட்டார உயர்கல்வி வழிகாட்டு மையங்கள் அமைப்பு

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கிப் பாராட்டினார் முதல்வர் ஸ்டாலின்.

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று IIT, NIT போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்த மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

தொடர்ந்து, உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 136 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பாராட்டுச் சான்று, மடிக்கணினிகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார் முதலமைச்சர் ஸ்டாலின்.

### IIT சேர்க்கை போட்டி

IIT எனப்படும் மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி நிறுவனங்களில் சேர்வதற்காக ஆண்டுதோறும் சுமார் 15 லட்சம் மாணவர்களுக்கு மேல் JEE எனப்படும் நுழைவுத் தேர்வு எழுதுகின்றனர். அதில் சுமார் 16 ஆயிரம் மாணவர்கள் மட்டுமே இந்தியா முழுவதும் உள்ள 23 IIT களில் படிப்பதற்காக தேர்ச்சி பெறுகின்றனர்.

குறிப்பாக இந்தியாவில் மொத்தம் உள்ள அனைத்து IIT களில் தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக முதலிடம் பிடிக்கும் IIT மெட்ராஸில் படிப்பதற்காக கடும் போட்டி நிலவுவதால், முதல் ஆயிரம் நபர்களுக்குள் வந்தால் மட்டுமே இங்கு படிப்பதற்கான இடம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

### மாற்று வாய்ப்புகள்

இந்த வாய்ப்புகளைத் தவறவிடும் பட்சத்தில் மாணவர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பாக IIT நிறுவனங்களில் B.S டேட்டா சயின்ஸ் மற்றும் B.S எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம்

என்ற இரு படிப்புகளுக்கு JEE போன்ற தேர்வுகள் ஏதும் இல்லாமல் IIT நிறுவனமே தனியாக தகுதித் தேர்வு ஒன்று நடத்துகிறது. இதற்கான நான்கு வாரப் பயிற்சியும் அவர்களே வழங்குகிறார்கள்.

குறிப்பாக இதில் தேர்ச்சி பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான மொத்த கல்விக் கட்டணத்தையும் டாட்கோ நிறுவனத்துடன் இணைந்து IIT யே ஏற்றுக்கொள்கிறது. மேலும் இந்த படிப்புக்கு வயது வரம்பு கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

### உயர்கல்வி வழிகாட்டு மையங்கள்

எனவே பள்ளி மாணவர்களுக்கு JEE, NEET உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 236 வட்டார உயர்கல்வி வழிகாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகப் பள்ளிக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

### சுற்றறிக்கை விவரம்

இது குறித்து, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்குப் பள்ளிக் கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்:

உயர்கல்விக்கான NEET, JEE உள்ளிட்ட போட்டித் தேர்வுகள் எழுத விருப்பமுள்ள மாணவர்களுக்காக வட்டார அளவிலான உயர்கல்வி வழிகாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்துவதற்காக இந்த ஆண்டு 38 மாவட்டங்களில் இருந்து உயர் தொழில்நுட்ப ஆய்வக வசதியுள்ள 236 வட்டாரங்களில் உயர்கல்வி வழிகாட்டி மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இங்கு மாணவர்களின் உயர்கல்வி விருப்பத்துக்கு ஏற்ப சனிக்கிழமைகளில் உரிய பயிற்சிகள் வழங்கப்படும். அதில் உயர்கல்வி சேர்க்கைக்கான ஆலோசனைகள், வழிகாட்டுதல்களைப் பெறலாம்.

### பயிற்சி ஏற்பாடுகள்

இந்த மையங்களில் பயிற்சி தர முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சுழற்சி முறையில் நியமிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

அதேபோல், பயிற்சிகள் தடையின்றி நடைபெறும் வகையில், சார்ந்த வட்டாரத்தின் பொறுப்பு பள்ளித் தலைமை ஆசிரியர் ஒவ்வொரு வாரமும் பணி புரிவதை உறுதி செய்ய வேண்டும்.

பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் ₹1,000 வழங்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**தஞ்சாவூர் மாநகராட்சி கீழவீதி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் "கண்ணொளி காப்போம்" திட்டத்தின் கீழ் பள்ளி மாணவியர்களுக்கு கண் பரிசோதனை நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.**

# காவலர்களுக்கான மதிப்பீட்டு படிவங்களில் சாதி குறிப்பை நீக்க அரசுக்கு தமிழ்நாடு போலீஸ் ஆணையம் பரிந்துரை..!

காவலர்களுக்கான மதிப்பீட்டு படிவங்களில் சாதி குறிப்பை நீக்க அரசுக்கு தமிழ்நாடு போலீஸ் ஆணையம் பரிந்துரைத்திருக்கிறது. காவலர் — பொதுமக்களுக்கு இடையேயான உறவை மேம்படுத்தவும், காவல்துறை பணியாளர்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்திடவும் புதிய பயிற்சி முறைகளைப் பரிந்துரைத்திடவும் புதிய காவல் ஆணையம் அமைக்கப்பட்டு பரிந்துரைகள் பெறப்பட்டு குறிப்பிட்ட கால வரையறைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார். அதன்படி, ஓய்வு பெற்ற நீதிபதி சி.டி. செல்வம் தலைமையில் புதிய காவல் ஆணையம் அமைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டு இருந்தார்.

இந்நிலையில், காவல்துறையில் ஒருமைப்பாட்டை உருவாக்க பல பரிந்துரைகளை தமிழ்நாடு 5ம் போலீஸ் ஆணையம் பரிந்துரைத்து இருக்கிறது. அதில், காவலர்களுக்கான மதிப்பீட்டு படிவங்களில் சாதி குறிப்பை நீக்க அரசுக்கு தமிழ்நாடு போலீஸ் ஆணையம் பரிந்துரைத்துள்ளது. சாதி பற்றிய தகவல்கள் மதிப்பீட்டில் பாகுபாடுகளுக்கு வழிவகுக்கும் என்பதால் நீக்க வேண்டும். தற்காலிக ஊழியர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கான ACR படிவங்களில் சாதி குறிப்பை நீக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



# பெற்றோர்கள் தினம்

பிறப்பின் அதிசயத்தை உருவாக்கும் உயிர்கள்
பிறந்திட்ட பிள்ளைகளுக்கே வாழ்ந்திடும் வாழைகள்

இல்லறத்தை இனிமையாக்க நல்லறத்தை சுமந்து
இருக்கும்வரை வாழ்க்கையில் கஷ்டங்களை கடந்து

துன்பத்தையே தூண்களாக்கி துயரங்களை துடைத்தவர்கள்
துஞ்சாத நெஞ்சங்களாக தூக்கங்களை துறந்தவர்கள்

வையகத்தில் வழித்தேடி வாழ்வதற்கு உழைப்பைதேடி
வளர்ந்திடும் குழந்தைகளுக்கு வழிகாட்டியாய் கல்வியைதேடி

அன்பான பிள்ளைகளை அறிவுடன் ஆளாக்கி
ஆகாயமும் வசமாக்க தங்களை தானமாக்கி

பெற்றதற்கு பெருமையாய் பிறந்தவர்களை உயர்வாக்கி
பெற்றோர்களாய் இருந்து பொறுப்புடன் பிள்ளைகளாக்கி

ஒளிவிளக்காய் பிரகாசித்த வாழவைத்த தெய்வங்கள்
ஒளிரும் மெழுகுவர்த்தியாய் ஒளிகொடுத்த உருவங்கள்



- சி.சுபாஷ் சந்திர போஸ்,
காவல்துணைக்கண்காணிப்பாளர் (ஓய்வு)

## தஞ்சை மாவட்டம் ஒட்டங்காட்டில்

# அதிகரிக்கும் தெருநாய்கள் தொந்தரவு... நடவடிக்கை எடுக்கப்படுமா..?

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஒட்டங்காடு ஊராட்சியில் தெரு நாய்கள் பெருக்கம் அதிகரித்து வருகிறது. பராமரிப்பின்றி திரியும் நாய்களினால் பொது மக்களும், வாகன ஓட்டிகளும் பெரும் அச்சுறுத் தலுக்கு ஆளாவதோடு, வெறி பிடித்து கடிக்க துரத்துவதனால் சாலை விபத்துக்கள் ஏற்பட வழிவகுக்கின்றன.

இது குறித்து ஒட்டங்காடு மக்கள் பலமுறை கிராம சபா கூட்டங்களில் மனு கொடுத்தும் இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. ஊராட்சி மன்ற தலைவர் முதல், வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலர் வரை பலமுறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை ஏதும் இல்லை. ஒட்டங்காடு கிராமத்தில் இருக்கும் தெரு நாய்கள் வீடுகளில் வளர்க்கும் ஆடு, மாடு, கோழி ஆகிய வளர்ப்பு பிராணிகளை வெறிகொண்டு கடித்து ஒரு உரிமையாளர் வீட்டில் 13 கோழிகள் மற்றும் மூன்று மாத கன்று குட்டி ஒன்று கடந்த ஜூலை 26 அன்று கடித்து கொன்று விட்டது.

இது குறித்து மக்கள் கொடுத்த புகார் மனுக்களுக்கு நடவடிக்கை முறையாக எடுத்திருந்தால் பல கால்நடை இறப்புகள் & இழப்புகள் ஏற்படமால் தடுத்திருக்கலாம். தமிழ்நாடு அரசு கால்நடை பிராணிகளை வளர்ப்பத்தை ஊக்குவிப்பதாக இருந்தால் தெரு



நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தாமல் அது சாத்தியமில்லை.

சென்னை போன்ற பெரிய மாநகராட்சியில் மட்டும் நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக 1913 என்ற அலைபேசி எண்ணை ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த திராவிட மாடல் அரசு கிராமங்களில் வாழும் ஏழை எளிய, நடுத்தர மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும், கால்நடைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பராமரிப்பின்றி சுற்றி திரியும் தெரு நாய்களை பற்றி புகார் அளிப்பதற்கு எவ்வித அலைபேசி சேவையையும் ஏற்படுத்தாததற்கும் அதை கிராமங்களில் விரிவுப்படுத்தாமல் இருப்பதற்கும் கிராம மக்களின் மீது தமிழ்நாடு அரசு வைத்திருக்கும் அக்கறையை இந்த உலகிற்கு வெட்ட வெளிச்சமாக காட்டுகிறது. இனியாவது நடவடிக்கை எடுக்குமா இந்த திராவிட மாடல் அரசு..






## தாய் தந்தையரை இழந்த மாணவிக்கு

# அனைத்து சான்றிதழ்களையும் பள்ளிக்கு சென்று வழங்கிய வட்டாட்சியர் தர்மேந்திரா

**பட்டுக்கோட்டை வட்டம், சிவன் கொல்லை தெரு, பழஞ்சூர் கிராமத்தில் வசித்து வரும் செல்வி.மேகலா (ஆதார் எண்.881625695008) என்பவர் புதுக்கோட்டை உள்ளூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறார். இவருடைய தாய் தந்தையர் வனரோஜா முருகன் என்பவர்கள் இவர் சிறுவயதாக இருக்கும்போது இறந்து விட்டனர். தற்போது இவரது பாட்டி வடுவம்பாள் என்பவரின் பராமரிப்பில் இருந்து வருகிறார்.**

*இந்த மாணவிக்கு பிறப்புச் சான்று, வருமான சான்று, சாதி சான்று, இருப்பிட சான்று ஆகியவற்றை உடனடியாக சமர்ப்பிக்குமாறு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மாணவியிடம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் அடிப்படையிலும் 30.07.2025 அன்று மாலை 5.00 மணியளவில் மேற்காணும் மாணவிக்கு உடனடியாக சான்றுகளை வழங்க மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். அதன் அடிப்படையில் 31 .07. 2025 காலை 10 மணிக்கு இந்த மாணவிக்கு தேவையான வருமான சான்று, இருப்பிட சான்று, சாதி சான்று ஆகியவைகளை உடனடியாக பள்ளிக்கு சென்று வட்டாட்சியர் தர்மேந்திரா வழங்கினார்.*

*இந்நிகழ்வில் மண்டல துணை வட்டாட்சியர், தம்பிக்கோட்டை வருவாய் ஆய்வாளர், பழஞ்சூர் கிராம நிர்வாக அலுவலர் உடன் இருந்தனர். இவர் 21.07.2010 சம்பைபட்டினம் கிராமத்தில் பிறந்துள்ளதால் அங்கு பிறப்பு பதியப்பட்டுள்ளதா என்பதை சரி பார்த்து இல்லை எனில் பதிவில்லா சான்று பெற்று ஒரு வார காலத்திற்குள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*மேலும் இந்த மாணவியின் பெயரினை இவரது பாட்டி வடுவம்பாள் என்பவரின் குடும்ப அட்டையில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பட்டுக்கோட்டை வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.*

*வட்டாட்சியர் தர்மேந்திரா அவர்களுக்கு மாணவியும், பொதுமக்களும் நன்றி தெரிவித்தனர்.*



29/07/2025 அன்று சென்னை குறிஞ்சி இல்லத்தில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை எம்.எல்.ஏ முத்துராஜ் அவர்கள் சந்தித்து, சமீபத்தில் புதுக்கோட்டை நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், சில ஊராட்சி பகுதிகள் புதுக்கோட்டை மாநகராட்சி பகுதிகளாக இணைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் 100 நாள் வேலை செய்து வருவாய் ஈட்டி வந்த பெண்கள் எந்த நிலையிலும் அந்த வருவாயை இழக்கக்கூடாது என்பதற்காக, அதே 100 நாள் வேலையை நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் அப்பகுதியில் வழங்கிட வேண்டுமென்றும், மேலும் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்த கோரிக்கையை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்" என்னும் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சி செயின்ட் சேவியர் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் முகாமினை பார்வையிட்டார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ,ப., அவர்கள் உடன் உள்ளார்.



### திராவிட மாடல் விடியல் ஆட்சியில்

# மயானத்திற்கு விடியல் எப்போது..?

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஒட்டங்காடு பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஒன்பது கிராமங்களில் ஒன்றான ஓட்டங்காடு உக்கடை நவக்கொல்லைக்காடு கிராமத்தில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலிருந்து இங்கு வசித்து வரும் இந்து பறையர், வண்ணார், நாவிதர், செட்டியார், கள்ளர், யாதவர், முத்திரையர் என அனைத்து சமூக மக்களுக்கும் பொதுவான வகையில் அனைவரும் பயன்படுத்தும் முறையில் ஒரே ஒரு சுடுகாடு தான் இருந்து வந்தது. பல ஆண்டுகளாக ஒரே கட்டிடம் இருந்து வந்ததன் காரணமாக காலப்போக்கில் மிகவும் சேதம் அடைந்திருந்தது. மேலும் அரசு துறை சார்பில் புதிதாக கட்டிடம் ஒன்றும் ரூ.21 லட்சம் மதிப்பீட்டில் துறை அனுமதி பெறப்பட்டிருந்தது.



*ஊராட்சி தலைவர் முன்பின் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று முன் அனுபவம் இல்லாத ஒருவர் என்ற காரணத்தினாலும், தனது விருப்பு வெறுப்புகளை தனது அதிகாரம் கொண்டு தீர்த்துக் கொள்பவர் என்பதாலும் ஊர் கூட்டம் அல்லது தீர்மானம் எதுவும் போடப்படாமலும், ஊர் மக்களிடம் எந்த விதமான முன் அறிவிப்பும் வழங்காமலும் சேதமாகி இருந்த மயான கட்டிடம் கடந்த 2021ஆம் ஆண்டு இடிக்கப்பட்டது. ஆனால் புதிதாக வந்த சுடுகாட்டு கட்டிட அனுமதி ஆவணத்தில் ஆதிதிராவிட சுடுகாடு என்று இருப்பதாலும், சுடுகாட்டிற்கான இடம் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பகுதிகளில் உள்ளதாலும் மற்ற சாதியினர் சுடுகாட்டை கட்ட அனுமதிக்கவில்லை.*

இந்த பிரச்சனையில் ஊராட்சி மன்ற தலைவர் இரு தரப்பினை வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்த தவறியதோடு தான்தோன்றித்தனமாக செயல்பட்டு தான் நவக்கொல்லைக்காட்டிற்கு தலைவர் இல்லை





என்று கூறியது வரலாறு. அதைத்தொடர்ந்து தஞ்சை மாவட்ட திட்ட அலுவலர் பதவியில் ஸ்ரீகாந்த் இ.ஆ.ப அவர்கள் இருந்தபோது இரு தரப்பினரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இருப்பினும் புதிய கட்டிட வேலைகள் துவங்கப்படாமல் இன்று வரை இடிக்கப்பட்ட கட்டிடம் மண்ணோடு மண்ணாகி வெட்ட வெளியாகிவிட்டது.

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2021—22 கூட்டத்தொடரின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விதி எண் 110 —ன் கீழ் தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் முன்மாதிரியாக விளங்கும் சிற்றூர்களுக்கு வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த ஊக்கத்தொகையாக அரசு சார்பில் ரூ. 10 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்படும் என அறிவிப்பினை வெளியிட்டார்.

மாவட்டத்திற்கு 3 ஊர்களுக்கு ரூ. 10 லட்சம் வழங்குவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து அரசு அரசாணை வெளியிட்டது.

"முன் மாதிரியாக உள்ள சிற்றூர்கள் பட்டியலில் முதலில் இந்த ஊர் இடம் பெற்று இருக்க வேண்டும். ஆனால் இதே போன்று இதற்கு முன்னால் இருந்த ஆட்சி காலத்தில் ஒற்றுமையாக இருக்கும் மக்களை ஊக்குவிக்கும் விதமாக சமத்துவ சுடுகாட்டிற்காக இந்த கிராமம் பரிசு பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக நாமே நமது இதழில் கடந்த 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இதழில் இந்த பிரச்சனையை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கவனத்திற்கு எடுத்து செல்லும் வகையில் செய்தி வெளியிட்டு இருந்தோம். இருப்பினும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. தொடர்ந்து ஒட்டங்காடு ஊராட்சி தலைவரை நான்காண்டு கால சாதனைகள் என்று தகுதியின்மையை குறிக்கும் சான்றாக நடந்த சம்பவங்களை பட்டியலிட்டு இந்த மயானம் தொடர்பான செய்தி உட்பட கடந்த ஆண்டு நவம்பர் மாத இதழில் செய்தி வெளியிட்டு இருந்தோம். இருப்பினும் எந்தவித நடவடிக்கையும் இல்லை.

திராவிட மாடல் விடியல் ஆட்சி பொறுப்பேற்று ஆட்சி முடியப்போகும் நிலையில் தற்போதாவது இந்த மயானத்திற்கு விடிவு பிறக்குமா? கண்டு கொள்வார்களா அதிகாரிகள்? கவனத்தில் கொள்வாரா மாவட்ட ஆட்சியர்?

# மாம்பலம் பகுதியில் மணிபர்ஸை திருட முயன்ற வெளிமாநிலத்தைச் சேர்ந்த 4 பெண்கள் கைது..!






சென்னை, சைதாப் பேட்டை, அப்பாவு நகர் பகுதியில் வசித்து வரும் சரவணன், 48, த/பெ.கணேசன் என்பவர் இரும்பு கடை நடத்தி வருகிறார். இவர் (31.07.2025) தி.நகர், போத்திஸ் துணி கடை முன்பு நடந்து சென்று கொண்டிருந்த போது, கூட்ட நெரிசலை பயன்படுத்தி 4 பெண்கள் மேற்படி சரவணன் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ஸை திருட முயன்றுள்ளனர். சுதாரித்துக்கொண்ட சரவணன் சத்தம்போடவே அருகிலிருந்த பொதுமக்கள் மேற்படி 4 நபர்களையும் மடக்கிப்பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

R—1 மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணையில் பிடிப்பட்ட நபர்கள் 1.சோனம், பெ/36, மத்தியபிரதேச மாநிலம், 2.நேகா, பெ/35, மத்தியபிரதேச மாநிலம் 3.சாவித்திரி பாய், பெ/36, மத்தியபிரேதச மாநிலம் 4.மோகினிபாய், பெ/45, மத்தியபிரதேச மாநிலம் என்பது தெரியவந்தது.

மேலும் இது குறித்து சரவணன் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். மேலும் விசாரணையில் எதிரிகள் இரயில் மூலம் பல்வேறு மாநிலங்களுக்கு சென்று பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு சென்று திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. மேலும் எதிரி சோனம் மீது 8 வழக்குகளும், நேகா மீது 1 வழக்கு உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட மேற்படி எதிரிகள் 4 நபர்கள் விசாரணைக்குப்பின்னர் (31.07.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.


---




**காவல்துறையினருக்கான மாநில அளவிலான துப்பாக்கிச் சுடும் போட்டியில் மேற்கு மண்டல காவல்துறை சார்பாக கலந்து கொண்டு வெற்றி பதக்கங்களுடன் திரும்பிய காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் மேற்கு மண்டல காவல்துறைத் தலைவர் திரு.த.செந்தில்குமார், இ.கா.ப.அவர்களை சந்தித்து பாராட்டு பெற்றனர்.**








**திருச்சி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் (02.08.2025) ஆயுதப்படை காவலர்களுக்கு நடைபெற்ற கவாத்து பயிற்சியை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்கள் பார்வையிட்டு காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். மேலும், ஆயுதப்படையில் பணிபுரியும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளினர்களின் குறைகளை கேட்டறிந்தார்.**

---

# திருவான்மியூர் பகுதியில் நடந்து சென்ற பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த நபர் கைது..!



சென்னை, பெசனட்நகர் பகுதியில் வசிக்கும் 35 வயது பெண்மணி ஒருவர், 30.07.2025 அன்று இரவு அவரது வீட்டிலிருந்த குப்பையை எடுத்துச் சென்று வீட்டினருகில் இருந்த குப்பை தொட்டியில் கொட்டிவிட்டு வீட்டிற்கு நடந்து செல்லும்போது, ஆக்டிவா இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஒருவர் மேற்படி பெண்மணியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு தப்பிச் சென்றார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட மேற்படி பெண்மணி J—6 திருவான்மியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (BNS Act) மற்றும் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்பு சட்டம் (TNPHW Act) ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

J—6 திருவான்மியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி சுதாகர், வ/30, அண்ணா தெரு, திருவான்மியூர், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய ஆக்டிவா இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி சுதாகர் மீது ஏற்கனவே கொடைக்கானல் காவல் நிலையத்தில் ஒரு போதைப்பொருள் வழக்கும், அடையாறு காவல் நிலையத்தில் ஒரு திருட்டு வழக்கும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி சுதாகர் விசாரணைக்குப்1 பின்னர் இன்று (02.08.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.

புதுக்கோட்டை பேருந்து நிலையத்தை விரிவாக்கம் மற்றும் மராமத்து பணி என கடந்த அதிமுக ஆட்சியில் பல கோடி ரூபாய் செலவு அதில் புதிதாக பல வாடகை கடைகளை கட்டி ஒப்பந்த முறையில் வாடகைக்கு விட்டு விட்டு திடீரென அதிநவீன வசதியுடன் புதிய பேருந்து நிலையம் கட்டப்படுவதாக அறிவித்துவிட்டு ஆறு ஆண்டுகள் முன்பு பல கோடி ரூபாய் செலவு செய்து விரிவாக்கம் செய்த கட்டுமான பணிகளையும் இப்போது இடித்து தள்ளி விட்டார்கள். எந்ததொரு தொலைநோக்கு திட்டமும் இல்லாமல் மக்களின் கோடிக்கணக்கான வரி பணத்தை நகராட்சி விரயம் செய்திருக்கிறது.



புதுக்கோட்டை நகராட்சி மாநகராட்சியாக தரவு உயர்த்தப்பட்டு இருக்கிறது தற்போதைய ஆட்சியில் புதிதாக அதிநவீன வசதியுடன் பேருந்து நிலையம் கட்டுவதற்காக அரசு சார்பில் செய்தி வெளியிட்டார்கள்.அதன் பிறகு பச்சை வலையில் பந்தல் போட்டு இதுதான் தற்காலிக பேருந்து நிலையம் என மக்களை மழையிலும் வெயிலும் சகதியிலும் நிற்க வைத்துவிட்டு தற்பொழுது பேருந்து நிலைய கட்டுமான பணி நடந்து வருகிறது.இதில் ஒப்பந்ததாரர் பெயர், எப்பொழுது தொடங்கி எப்பொழுது முடியும் என்பது தொடர்பான அறிவிப்பு திட்ட மதிப்பீட்டின் தொகை

# புதுக்கோட்டையில் புதிதாக நவீன வசதியுடன் கட்டப்பட்டு வரும் பேருந்து முனையத்தின் தில்லுமுல்லுகள்..



போன்ற விவரங்கள் அடங்கிய அறிவிப்பு பலகைகள் இன்னும் வைக்கப்படவில்லை.ஆனால் மாவட்ட ஆட்சியர் மந்திரிகள் என தினந்தோறும் யாராவது ஒருவர் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை ஆய்வு செய்ததாக செய்தி வருகின்றது.

புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் அளவு எவ்வளவு ? இப்பொழுது எவ்வளவு பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது என்பது குறித்து மக்கள் கேட்டார் பதில் இல்லை. அவசரக்கதியில் குழி நோண்டி உடனுக்குடன் கம்பிகளை கட்டி அள்ளிய மண்ணையே மறுபடி உள்ளே போட்டு மூடுகிறார்கள். அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கமிஷனை பெற்றுக் கொண்டு கண்டுகொள்ளாமலும் சமூக ஆர்வலர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காமலும் புதுக்கோட்டை நகராட்சி நிர்வாகம் தில்லுமுல்லு செய்கிறது.


துரை குணா

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கட்டுமான பணி தொடர்பான அனைத்து ஆவணங்களையும் மக்கள் பார்வையிட கேட்டிருக்கிறோம்.. திட்ட அறிக்கைகளின் படி பணி நிறைவேற விட்டால், உயர் நீதிமன்றத்தை நாடுவதை தவிர வேறு வழியில்லை என்கிறார் சமூக செயல்பட்டாளர் துரை குணா.

---

## தமிழ்நாடு மாநில காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி -2025

# முதலிடம் பிடித்த தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த ஆயுதப்படை பெண் காவலர்!





மாநில காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி செங்கல்பட்டு மாவட்டம் ஒத்திவாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அதிதீவிரப்படை/ பள்ளி பயிற்சி மையம்/துப்பாக்கி சுடு தளத்தில் 24.07.2025 முதல் 26.07.2025 வரை போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த போட்டியில் மேற்கு மண்டல காவல்துறை சார்பில் கலந்துகொண்ட தருமபுரி மாவட்ட ஆயுதப்படையை சேர்ந்த முதல் நிலை பெண் காவலர் திருமதி. குமுதா அவர்கள் 100 yards standing position – பிரிவில் கலந்துகொண்டு முதலிடத்தை பிடித்தார். இவரை பாராட்டி காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத்தலைவர் திரு.சங்கர் ஜிவால், இ.கா.ப., அவர்கள் பதக்கம், சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார். மேலும் தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.S.மகேஸ்வரன்,B.com.BL., அவர்கள் பெண் காவலர் திருமதி. குமுதாவை நேரில் அழைத்து பாராட்டுகளை தெரிவித்து வெகுமதி வழங்க ஆவண செய்தார்.



# சொத்துப் பதிவில் ரொக்க பரிவர்த்தனை... சார்–பதிவாளர்களுக்கு பதிவுத் துறை அறிவுறுத்தல்!

சொத்துப்பதிவின்போது, ரூ.20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகை ரொக்கமாக பரிவர்த்தனை செய்யப்பட்டிருந்தால் அதுகுறித்து வருமான வரித்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று சார்பதிவாளர்களுக்கு, உச்சநீதிமன்ற தீர்ப்பை சுட்டிக்காட்டி மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அனைத்து சார் பதிவாளர்களுக்கும் பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, ரூ.20 ஆயிரத்துக்கும் அதிகமாக ரொக்கப் பரிமாற்றம் நடைபெற்றுள்ளதாக ஆவணத்தில் குறிப்பிட்டிருந்தால், வருமான வரித்துறைக்கு தெரிவிக்க வேண்டும் என்று மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

பதிவு அதிகாரிகள், பதிவுக்கு வரும் ஆவணத்தில் ரொக்கப் பரிமாற்றம் தொடர்பான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறு ரூ.20 ஆயிரத்துக்கும் மேல் ரொக்கப் பரிமாற்றம் குறித்த தகவல் ஆவணத்தில் இருந்தால், அதுகுறித்து வருமான வரித்துறைக்கு ஆவணத்தின் நகலுடன் தகவல் அளிக்க வேண்டும். பதிவுக்குப்பின், தகவல் அளிக்கப்பட்டதற்கான அறிக்கை, ஆவணத்தின் நகல் ஆகியவற்றை இணைப்பு பக்கமாக பாதுகாக்க வேண்டும்.

ஒரு வேளை பதிவு அதிகாரிகள் வருமான வரித்துறைக்கு தகவல் தெரிவிக்காதது அல்லது காலம் தாழ்த்தியது தெரிந்தால், மாவட்ட பதிவாளர்கள் அதுகுறித்த அறிக்கையை மண்டல துணை பதிவாளர்களுக்கு அனுப்பி, சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட மாவட்ட தணிக்கை பிரிவு பதிவாளர் பதிவுக்கு வரும் ஆவணங்களை ஆய்வு செய்ய வேண்டும். பதிவு அலுவலர்கள் வழங்கப்பட்டுள்ள உத்தரவை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். மாவட்ட பதிவாளர்கள், துணை பதிவுத் துறை தலைவர்கள் உரிய அறிவுறுத்தல்களை பதிவு அலுவலர்களுக்கு வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**

# Z System Intelligent Controls Private Limited

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

## Our Principles & Products

SIEMENS



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement




## Our Service



Power



Water & Waste water



Metro



SPM



Cement



Metal



Smart World

## Our Clients

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, Amal Nagar, Tambaram
Chennai-600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in
/zsystem_in
/z-system-intelligent-controls-pvt-ltd




Follow us

Call Us
9962012354

Mail Us
Info@geesysindia.com

Learn more
www.geesysindia.com